**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1–ம் நாள் வியாழக்கிழமை
******

**இடைமனு எண். 4/2023–ல் அசல் வழக்கு எண். 4/2017**

பாலகிருஷ்ணன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

1. பாண்டியன்
2. பிரவின்
3. சந்தோஷ்குமார் ....... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

4. நடராஜன் ....எதிர்மனுதாரர்/புதிதாக சேர்க்க வேண்டிய நபர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 29.01.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் S.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், அனைத்து தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–6, விதி–17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

(i) இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். வழக்கில் மனுதாரர்/வாதி, 1 முதல் 3 எதிர்மனுதாரர் /1 முதல் 3 பிரதிவாதிகள் மீது நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். அதில் இடைமனு எண் 12/17–ல் இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால தடை உத்தரவு 26.04.2017 அன்று பெற்றுள்ளார். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது தாவா சொத்தின் ஒரு பகுதியை 1–ம் பிரதிவாதி கடந்த 25.07.2018–ல் ஆக்கிரமித்து வீடு கட்ட ஏற்பாடு செய்தார். எனவே தாவா வழக்கின் பரிகாரத்தை வசப்பரிகாரமாக மாற்ற வேண்டிய அவசியம் மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ளது. தாவா முதல் அயிட்ட சொத்து மனுதாரர்/வாதியின் தகப்பனார் பெயரிலும் தாவா இரண்டாம் அயிட்ட சொத்து மனுதாரர்/வாதி மற்றும் மனுதாரரின் சகோதரர் அகோரம் மற்றும் நடராஜன் பெயரிலும் கூட்டு பட்டா உள்ளது.

(ii) மனுதாரர் சகோதரர்களான அகோரம் மற்றும் நடராஜனை வாதிகளாக சேர்த்து இவ்வழக்கை நடத்த தரப்பினராக முன் வராததால் அவர்களை வாதிகளாக இவ்வழக்கில் சேரக்க இயலவில்லை. எனவே மனுதாரரின் சகோதரர்களை இவ்வழக்கில் 4.5 எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்களாக சேர்க்க இவ்வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் இடைமனு எண்.1/2021 தாக்கல் செய்யப்பட்டு அது மாண்பமை நீதிமன்றத்தில் கடந்த 27.04.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. இதனை அனுசரித்து தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்/வாதிக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை 1 மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் தங்களுடையதாக ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

(i) மனுதாரர்/வாதி அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானவை. அபிடவிட்டில் கூறியுள்ள கருத்துக்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பான கருத்துக்களாகும். அபிடவிட்டில் மனுதாரர்/வாதி

உண்மைக்கு புறம்பான கருத்துக்களை கூறி பொய்யான அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். அபிடவிட்டில் மனுதாரர்/வாதி கூறியுள்ள விவரங்களை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர்/வாதி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தற்போது சுவாதீன் மீட்பு பரிகாரம் கோரி அசல் வழக்கை திருத்தம் செய்வதால் வழக்கின் நேச்சுரல் பாதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி கோரியவாறு அசல் வழக்கை திருத்தம் செய்வதால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டமும் ஈடு செய்யமுடியாத இழப்பும் ஏற்படும்.

(ii) மனுதாரர்/வாதி தனது அபிடவிட்டில் கடந்த 25.07.2018–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தாவா சொத்தினை ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளது பொய்யான தகவலாகும். மனுதாரர்/வாதி கூறிய தேதியிலிருந்து காலம் கடந்து அசல் வழக்கினை திருத்தம் செய்ய மனுதாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி தனது மனுவில் கடந்த 25.07.2018–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி ஆக்கிரமித்து வீடு கட்ட ஏற்பாடு செய்தார் என கூறியுள்ளார். மேற்படி 25.07.2018–ம் தேதியிலிருந்து 3 ஆண்டுக்குள் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி அசல் வழக்கினை திருத்தம் செய்ய இயலும். ஆனால் காலம் கடந்த 23.10.2021–ம் தேதியில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ளார். இதிலிருந்து மனுதாரர்/வாதி தனது அபிடவிட்டில் கூறிய தேதியிலிருந்து வசப் பரிகாரம் கோர மனுதாரர்/வாதியின் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) தாவா சொத்தானது மனுதாரர்/வாதியின் கூட்டுக் குடும்ப சொத்தாக இருந்து வந்துள்ளது. அது கிராம பொதுவடைக்கு பயன்படுத்தி வந்துள்ளதாகவும், கிராம பொதுவடை விகித உரிமையாளர்கள் சார்பாக 1. தங்கவேல் பிள்ளை குமாரர் சிவப்பிரகாசம் பிள்ளை, 2. தர்மலிங்கம் பிள்ளை மகன் சிவப்பிரகாசம் பிள்ளை, 3. ஞானசுந்தர பிள்ளை மகன் பாலசுப்ரமணியன் பிள்ளை, 4. தர்மலிங்கம் பிள்ளை மகன் பாலகிருஷ்ணன் பிள்ளை, 5. கோவிந்தசாமி பிள்ளை மகன்

முத்துக்குமாரசாமி பிள்ளை, 6. வேலு பிள்ளை மகன் கோவிந்தராசு பிள்ளை ஆகிய 6 நபர்கள் கடந்த 11.04.2001-ம் தேதி 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் பெயருக்கு கிரய உடன்படிக்கை பத்திரம் எழுதி கொடுத்து சொத்தின் வசத்தை விட்டுவிட்டனர். மேற்படி தேதியிலிருந்து கடந்த 21 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தில் வீடு கட்டி தனது குடும்பத்துடன் குடியிருந்துக்கொண்டு 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி அனுபோகம் செய்து வருகிறார்.

(iv) தாவா சொத்தானது கடந்த 21 ஆண்டுகளுக்கு மேலாக 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் சுவாதீனத்திலும், அனுபோகத்திலும் இருந்து வருகிறது. அதனை மறைத்து ஏதோ கடந்த 25.07.2018-ம் தேதிதான் தாவா சொத்தினை 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி ஆக்கிரமணம் செய்துள்ளார் என கூறி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல. மனுதாரர்/வாதி வழக்கு காலாவதியாகிவிட்டதால் வசப் பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கினை திருத்தம் செய்ய முடியாது.

(v) மனுதாரர்/வாதி தனது அசல் வழக்கில் கடந்த 30.12.2016-ம் தேதி 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமணம் செய்யப்போவதாக பொய்யாக கூறி இந்த அசல் வழக்கை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளார். தற்போது 25.07.2018-ல் ஆக்கிரமணம் செய்துவிட்டதாக மறுபடியும் பொய்யாக கூறி அசல் வழக்கை திருத்தம் செய்வது ஏற்புடையதல்ல. எனவே அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, 1 முதல் 3 எதிர்மனுதாரர் /1 முதல் 3 பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு 1–ம் பிரதிவாதி கடந்த 25.07.2018–ல் ஆக்கிரமித்து வீடுகட்ட ஏற்பாடு செய்தார் என்பதால் சுவாதீனம் மீட்பு பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த வேண்டி வழக்கு சொத்தின் கூட்டு உரிமையாளர்களான வாதியின் சகோதர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க இடை மனு எண்.1/2021 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 07.12.2022–ல் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. இடைமனு எண்.1/2021–ன் படியும் தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் 25.07.2018–ல் ஆக்கிரமித்து விட்டதாகவும் அதன் அடிப்படையில் வழக்கில் சுவாதீன பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியால் வழக்குரையை திருத்தப்பாடு செய்யக்கோரும் பரிகாரமானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் கூற்றுப்படியே 25.07.2018–ல் இருந்து மூன்று ஆண்டுக்குள் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றும், தாவா சொத்தானது 11.04.2021 முதல் 1–ம் எதிர்மனுதாரரின் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், எனவே மனுதாரரின் இம்மனு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

(iii) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது இடைமனு எண்.1/2021–ல் கடந்த 07.12.2022–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் விளைவாகவும், தாவா நிலுவையில் இருந்த காலத்தில் 1 முதல் 3 எதிர்மனுதார்கள் தாவா சொத்தை ஆக்கிரமித்து விட்டதாகவும், அதன் அடிப்படையில் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தப்பாடு செய்யவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலவரையறை என்பது சட்டம்

மற்றும் பொறுண்மையை சார்ந்ததாகும். இவ்வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை வழக்கு சாட்சிய விசாரணையின் மூலமே முடிவு காண இயலும். மேலும் அசல் வழக்கானது இன்னும் சாட்சிய விசாரணை துவங்கப்படாமல் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும், வழக்கின் தன்மையும் மாறுவதில்லை.

(iii) மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்றும், தரப்பினர்களுக்கிடையே பின்னிட்டு ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் (Multiplicity proceedings) வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>**பின் இணைப்பு**</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> | – இல்லை – |

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.4/2023–ல்
அசல் வழக்கு எண்.4/2017
நாள்.1.2.2024.